Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Seyizhaiyar in *Silambu*

**Dr. N. S. K. Sangeethratha,** Assistant Professor of Tamil, Thiagarajar College. Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0297-3100
**DOI: 10.5281/zenodo.14744682**

## Abstract

*"Silappadhikaram" is the first Kapiyam (epic) that emerged in Tamil Literature. It is called the first Tamil Kapiyam. The Triumvir's Kapiyam, The Vaniga (Commerce) Kapiyam. The Drama Kapiyam. The Kudimakkal (Common Man's) Kapiyam. "Silappathikaram" revolutionized the literary works that traditionally glorified kings and nobles by creating a woman as the heroine of the epic. Kannagi is the heroine of the epic. She is a daughter born into a merchant family and married into a high-ranking family and was praised as a chaste wife by the poets and eventually worshipped as a goddess. The leading character of the "Silappadhikaram" epic is not only a woman every character is a gem of the story. The female protagonists are the turning point of the epic and the ones who give life to every movement of the story. All these female protagonists revolve around the protagonist Kannagi. The article examines the role of female protagonists in the leading roles of the epic.*

**Keywords:** *Silappadhikaram*, Seyizhaiyar, Kannagi, Chaste Woman, Tamil Literature.

## References

[1] Ramasubramaniyam, V. T. *Puranaanuru.* Thirumagal Nilaiyam, T.Nagar, Chennai-17. 2008.
[2] Ramasubramaniyam, V. T. *Nattrinai*, Thirumagal Nilaiyam, T.Nagar, Chennai-17, 2009.
[3] Somasundaranar, P. V. *Kurnthogai*, Thirunelveli Saiva Siddhanantha Nool Pathipagam, Chennai-17, 2007.
[4] Parimaelazagar, *Thirukural.* Sri Senbaga Pathipagam, T.Nagar, Chennai-17, 2016.
[5] Manivasagan, G. *Tholkapiyam.* Uma Pathipagam, Mannadi, Chennai-01, 2006.
[6] Manivasagan, G. *Silappadhikaram.* Uma Pathipagam, Mannadi, Chennai-01, 2022.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சிலம்பு காட்டும் சேயிழையார்

**முனைவர் ந. செ. கி. சங்கீத்ராதா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு. இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0297-3100**
**DOI: 10.5281/zenodo.14744682**

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழில் எழுந்த முதல் காப்பியம்! முத்தமிழ் காப்பியம்! மூவேந்தர் காப்பியம்! வணிகக்காப்பியம்! நாடகக் காப்பியம்! குடிமக்கள் காப்பியம்! என்ற எண்ணிலடங்கா அடைமொழிகளைக் கொண்டதுதான் சிலப்பதிகாரம். அரசர்களையும் வள்ளல்களையும் போற்றிப்பாடி எழுந்த இலக்கியப் படைப்புகளுக்கிடையில் பெண்ணைக் காப்பியத் தலைவியாகப் படைத்து புரட்சி செய்த புதுமைக்காப்பியம். வணிகக் குலத்தில் பிறந்து வானுலகம் சென்ற மகள் மட்டுமன்று உயர்ந்த குடியில் பிறந்து உரைசால் பத்தினியாகப் போற்றப்பட்டு இறுதியில் பத்தினித் தெய்வமாக வணங்கப்பட்டவள் கண்ணகி. சிலப்பதிகாரத்தில் தலைமைப் பாத்திரம் மட்டுமன்று பெண். காப்பியத்தின் திருப்புமுனையாகவும் கதையின் ஒவ்வொரு அசைவுக்கும் உயிரோட்டம் கொடுப்பவர்களாகவும் பெண் கதை மாந்தர்களே திகழ்கிறார்கள். இப்பெண் மாந்தர்கள் அனைவரும் கண்ணகியை மையமிட்டே வலம்வருகின்றனர். காப்பியத்தை முன்னெடுத்து செல்வதிலும் முதன்மை வகிப்பதிலும் பெண்மாந்தர்களின் செயல்பாடு எத்தகையது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** *சிலப்பதிகாரம்*, சேயிழையார், கண்ணகி, கற்புள்ள பெண், தமிழ் இலக்கியம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தை தொடர்ந்து வருவது காப்பிய இலக்கியமாகும். மூவேந்தர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், கடையேழு வள்ளல்கள் ஆகியோரின் வீரம், கல்வி, கொடை, புகழினைப் பாடுவது புறம் என்றும் தலைவன் தலைவியின் அக வாழ்வினை, அன்பினைப் பாடுவது அகம் என்றும் சங்க இலக்கியம் வகைப்படுத்தியது. இறைவனையும் அரசனையும் போற்றிப் பாடிக்கொண்டிருந்த சமுதாயத்தில் சாதாரண குடிமக்களை தலைவன் தலைவியாகக் கொண்டு நீதியை நிலைநாட்டுவதற்காக எழுந்த காப்பியம்தான் சிலப்பதிகாரம். வணிகக் குலத்தில் பிறந்த கோவலனையும் கண்ணகியையும் பாட்டுடைத் தலைவன், தலைவியாகக் கொண்டு படைக்கப்பட்டது. சமணசமயக் கருத்துகளை முன்னிறுத்தியது. அனைத்திற்கும் மேலாக பெண்ணைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டு படைக்கப்பட்டது. தலைமைப் பாத்திரம் மட்டுமன்று

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

காப்பியத்திலுள்ள பெண் மாந்தர்களின் பண்புகள் எங்ஙனம் சித்திகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் காப்பியத்தின் வளர்ச்சிக்கு எத்துணை உறுதுணையாக உள்ளன என்பதையும் ஆய்வதே இக்கட்டுரையின் மையமாகும்.

**அருள் வாக்குரைத்த அணங்கு**

முதன்முதலில் காப்பியத்தில் கண்ணகியை "உலகம் போற்றும் மாமணியாகத் திகழப்போகிறாள்" என்றுரைத்தவள் ஒரு வேடுவர் குலப்பெண். கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளோடு மதுரைக்கு வரும் வழியில் ஐயைக் கோட்டத்தினை அடைகிறார்கள். அவ்விடத்தில் சாலினி என்ற இளம்பெண் மேல் தெய்வம் வந்து ஆடுகிறாள். அப்போது,

**இவளோ, கொங்கச்செல்வி! குடமலையாட்டி!**
**தென்தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து**
**ஒருமா மணிஆய் உலகிற்கு ஓங்கிய**
**திருமா மணி (வே.வரி. 45-50)**

என்று அவ்விடம் இருந்த கண்ணகியைச் சுட்டிக் காட்டுகிறாள். பாண்டியனின் தென்தமிழ்ப்பாவையாக ஒப்பற்ற மாமணியாக இவ்வுலகிற்கெல்லாம் தலைசிறந்து விளங்கும் மாமணியாகத் திகழப்போகிறாள் என்று முழக்கமிடுகிறாள். கதை ஓட்டத்தில் இதுவரை பெண்மை நலன் பொருந்திய "அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல். 1042) சாதாரண பெண்ணாக இருந்த கண்ணகி பின்னாளில் அசாதரணமான நிகழ்சியினை செயல்படுத்தி பத்தினித் தெய்வமாகப் போற்றப் படுவாள் என்ற குறிப்பினைத் தனது அருள்வாக்கால் எடுத்துரைத்தவள் ஒரு வேடுவப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

வேட்டுவவரியில் "தேவராட்டி" என்ற பெண் சாமியாடியைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. "கண்ணப்ப நாயன்மார் புராணத்தில் திண்ணன் வேட்டைக்குச் செல்லும்முன் ஒரு தேவராட்டி வந்து அருள்பாலித்துச் செல்வாள்" என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. தெய்வம் இறங்கி பேசுபவளாக ஒரு வேடுவ குலப் பெண் படைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், கொற்றவைக்கான அலங்காரத்தை அப்பெண்ணிற்கு எங்ஙனம் புனைகிறார்கள் என்பதை விவரித்துக் காட்டியுள்ளார்ஆசிரியர். இனக்குழு சமூகத்தில் தாய்த்தெய்வ வழிபாடு மற்றும் சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு போன்றவற்றின் நீட்சியாகவே இதனைக் காண முடிகின்றது. "பெருமையும் உரனும் ஆடுஉ மேன" (தொல். 1041) என்பதற்கு மாறாக அப்பெண்ணிற்கு பாண்பவர் அச்சம் கொள்ளும் தோற்றத்தில் வேடம் தரிக்கிறார்கள். வீரத்தின் விளைநிலமாக பெண்களை உருவகப்படுத்துகிறார் ஆசிரியர்.

**கோயில் எழுப்பிய தேவி**

சேரன் செங்குட்டுவனின் மனைவி சேரன்மாதேவி. "காட்சிக் காதையில்" தம் கணவன் சேரனோடு சேர்ந்து மலைவளம் வரும்போது, குன்றக்குரவர்களிடம் அவர்கள் கண்ட

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

காட்சியையும், தண்டமிழ் ஆசான் சீத்தலைச் சாத்தனாரிடம் வாயிலாக கண்ணகியின் வரலாற்றையும் கேட்டறிந்தந்தவள் சேரன்மாதேவி. கண்ணகியின் கதையைக் கேட்ட இளங்கோவடிகள் முதற்கொண்டு சேரன் செங்குட்டுவன் வரை அனைவரும் வியப்பிலிருந்து விடுபடாது இருந்த தருணத்தில், நம் நாடு வந்தடைந்த பத்தினித் தெய்வத்திற்கு கோயில் எழுப்ப வேண்டும் என்று உரத்த குரலில் சொன்ன ஒற்றைக் குரல் வேண்மாள் தேவியின் பெண்குரல்.

**நம் அகல்நாடு அடைந்தவிப்**
**பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும் (கா.காதை. 110-115)**

என்கிறாள். கண்ணகியின் வரலாற்றைக் கேட்டறிந்த சேரஅரசன் வருத்தமுற்று, இதற்கு நாம் என்ன செய்வது? என்று அங்கிருந்த வேண்மாளிடம்தான் வினவினான். இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், அமைச்சர்கள் என்று அனைவரும் உடனிருக்க அரசனது வினா தேவியை நோக்கியே சென்றது என்பது உற்று நோக்கத்தக்கது. ஆட்சி அரசியலிலும் நிர்வாகத்திலும் பெண்கள் பங்குபெற்று தங்களது கருத்துகளை முன்வைத்து மொழிவது சிறப்பு என்பதற்கு வேண்மாள்தேவியின் அறச்சொல் ஒரு பதச்சான்றாகும். போர்தொடுக்க முற்பட்ட கிள்ளிவளவனுக்கு ஔவை அறிவுறுத்திய புறநானூற்றுப் பாடல் - 95 (இவ்வே, பீலி அணிந்து) ஈங்கு நினைவு கூரத்தக்கதாகும். காப்பியத்தில் கண்ணகியின் பாத்திரப்படைப்பை உச்சத்திற்கு கொண்டு செல்லும் ஆசிரியர், அந்த உயர்வினைக் காக்கும் பொருட்டு பெண் மாந்தர்களை படைத்திருப்பது உன்னதமானது. அதாவது, கண்ணகியை உயர்த்திப் பிடிக்கும் கம்பத்தினை வளைகரங்களில் வழங்கியிருப்பதுதான் சிறப்பு!.

**தாய்மை கொண்ட துறவி**

கோவலன் கண்ணகிக்குத் துணையாக மதுரை வந்ததோடு மட்டுமல்லாமல் அவர்களை மாரியிடம் அடைக்கலமாக அருளச்செய்த பெருமை பெண் சமனத்துறவி கவுந்தியடிகளையே சாரும். கோவலன், கண்ணகி இருவரும் சோழநாட்டிலிருந்து பாண்டியநாட்டை வந்தடைய வழிகாட்டியதோடு மட்டுமல்லாது வாழ்க்கைத் தத்துவத்தையும் போதித்தது ஒரு பெண் சமணத்துறவி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அருகதேவனை அன்றி வேறு எந்த தெய்வத்தையும் வணங்கியறியாத கவுந்தியடிகள் முதன்முதலாக கண்ணகியைப் பார்த்து "பொற்புடைத் தெய்வம்" என்கிறார்.

**தன்துயர் காணாத் தகைசால் புங்கொடி**
**இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்**
**கற்புக் கடம்புண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் (அடை.காதை. 140-145)**

கற்புத்திறம் கொண்ட தெய்வம் அன்றி வேறு எந்த தெய்வத்தையும் இதுவரை கண்டதில்லை என்று கவுந்தியடிகள் குறிப்பிடுகிறார். அடைக்கலத்தின் சிறப்பினையும் அடைக்கலம் தந்ததால் அடைந்த பயனையும் மாதரியிடம் எடுத்துரைக்கிறார். பற்றற்ற கவுந்தியடிகள் கண்ணகிமேல்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

பற்று கொண்டு தன் மகள் என்று உறவு கொள்கிறார். கண்ணகியின் கற்பின் திறத்தைப் பாராட்டி"பொற்புடைத் தெய்வம்" எனக் கூறிய கவுந்தியடிகள், கண்ணகியின் பிறந்த வீட்டுச் செல்வ வளத்தையும் புகுந்த வீட்டுச் செல்வ செழிப்பினையும் எடுத்துரைத்ததோடு மட்டுமல்லாது அவளுக்குத் தாயாக மாதரி இருந்து அவளை அரவணைக்க வேண்டும் என்கிறார்.

**ஆயமும் காவலும் ஆய்இழை தனக்குத்**
**தாயும் நீயே ஆகித் தாங்கு ஈங்கு (அடை.காதை. 135-137)**

என்கிறார். உலகியலில், ஒருதாய் தான் தன் மகனை மற்றொரு பெண்ணிடம் ஒப்படைக்கும்போது(புகுந்தவீடு) நீங்கள்தான் தாய்போல் என் மகளைப் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பாள். அத்தகைய தாய்மைப் பண்பை கவுந்தியடிகள் இவ்விடம் பெற்றுவிட்டார். பற்றற்ற துறவியையும் தாயாக மாற்றிய "வயங்கிய பெருங்குணத்தாளாக" கண்ணகி காட்சியளிக்கிறாள்.

**கலையைத் துறந்த காரிகை**

கணிகையர் குலத்தில் பிறந்தவள் எனினும் கோவலனை மணந்து கற்புடை மங்கையாக மாறாது திகழ்ந்தவள் மாதவி. ஆடலில் தலைக்கோல் பட்டம் பெற்றவள் என்றாலும் கோவலனைத் தவிர எந்தவொரு ஆடவனையும் ஏறெடுத்துப் பாராதவள். ஆடல் மங்கையாக அறிமுகமாகிய மாதவி குலப்பெண்ணாக கோவலனின் குழந்தைக்குத் தாயாகிறாள். பொருட்பெண்டிர்களுக்கு மத்தியில் கோவலனுக்காக தமது கலைத்திறனை தியாகம் செய்து தமது வாழ்விற்கான பொருளினை (துறவு) மேற்கொண்டவள் மாதவி. மாதவியின் மேன்மையினை அறிவதற்கு அவளது மடல் ஒன்றே பதச்சான்றாகும். அதனால்தான் அக்கடிதத்தை தமது பெற்றோரிடம் சேர்க்குமாறு கோவலன் கூறுகிறான். தேர்ந்த சொற்றொடர்களால் ஆக்கப் பெற்ற உயர்ந்த பண்புகளை ஒருங்கிணைத்த கடிதம் அது. அக்கடிதத்தில் தன்னை விட்டுச்சென்றதிற்கான கேள்வி இல்லை மாறாக, கோவலனிடம் நடு இரவில் ஒரு குலப்பெண்ணை அழைத்துக்கொண்டு நகரைவிட்டு போனதற்கான வருத்தத்தைத் தெரிவிக்கிறாள் மாதவி. மேலும், கண்ணகியை "குலமகள்" எனக் குறிப்பிடுகிறாள். மதுரையில் கோவலனுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்து துறவு மேற்கொள்கிறாள் மாதவி. அதோடு மட்டுமல்லாது தனது ஒரே மகளான மணிமேகலையையும் இளமையிலே துறவு மேற்கொள்ளச் செய்கிறாள். எல்லாவற்றிற்கும் மேலாக மணிமேகலையை தன் மகள் என்று சொல்லாமல் "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை" என்றே குறிப்பிடுகிறாள். கண்ணகியை தாய்மைப்பேறு அடையச்செய்த பெருமை மாதவியைச் சாரும்.

**துயரம் களைந்த தோழி**

கண்ணகியின் தோழியாக அறியப்படுபவள் தேவந்தி. காப்பியத்தில் தேவந்தியிடம்தான் முதன் முதலில் தான் கண்ட கனவின் துயரத்தை வெளிப்படுத்துகிறாள் கண்ணகி. தேவந்தியின்

கணவனான பாசண்டச் சாத்தன் அவளை விட்டு பிரிந்து போனபின், மிக்க துயரத்துடன் கணவன் மீண்டும் வரவேண்டும் என்று அந்தப் பாசண்டச் சாத்தன் கோயிலில் சென்று நாள்தோறும் வழிபாடு செய்பவள் தேவந்தி!.

**கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று**
**எண்ணிய நெஞ்சத்து இளையளாய் நண்ணி**
**அறுகு, சிறுபுளை, நெல்லொடு தூஉய்ச் சென்று**
**பெறுக, கணவனோடு என்றாள் (கனா.காதை.40-45)**

கண்ணகி கணவனோடு சேர்ந்து இன்புற்று வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்ற தேவந்தி தனது கணவனைப் பிரிந்திருப்பவள் என்பது குறிப்பிடத்தக்கது. தான் துயருற்ற நிலையிலும் அதே துயரினை அடைந்த கண்ணகி நிலை கண்டு பெறாது, அவளை வாழ்த்துகின்ற தேவந்தி உயர்வாகப் போற்றப்படுகிறாள். வரம் தரு காதையில் கண்ணகியின் அருள் வாக்கினை எடுத்துரைப்பவளாக தேவந்தி தென்படுகிறாள். அச்சமயம் அரசன் முதற்கொண்டு அனைவரின் வேண்டுகோளையும் ஏற்றதும் அவர்களோடு உரையாடியதும் கண்ணகியின் பிரதிபலிப்பான தேவந்தியேயாகும்.

**அடைக்கலம் அளித்த ஆய்ச்சி**

மாதரி ஆயர் குலத்தைச் சேர்ந்த முதுமகள். கண்ணகியையும் கோவலனையும் ஒப்படைப்பதற்கு கவுந்தியடிகள் தேர்ந்தெடுத்ததுமதுரைக்கு அருகிலுள்ள புறஞ்சேரியில் ஆடு, மாடுகளை வளர்த்துக்கொண்டு வாழந்து வரும் ஆயர்குலப் பெண்ணான மாதரி ஆவாள். மாதரி வாழ்ந்துவரும் பகுதியைக் அறம் தழைத்தோங்கியதோடு அறவோர்கள் பெருகிய பகுதி எனக் கவுந்தியடிகள் குறிப்பிடுகிறார்.

**அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய**
**புறம்சிறை மூதூர்ப் புங்கண் இயக்கிக்குப்**
**பால்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோன் (அடை. கா. 115-117)**

மாதரியை அறிமுகப்படுத்தும்போது "இயக்கி என்ற பெண்" தெய்வத்திற்கு பாலினை அமுதளித்து வணங்கி வரும் பண்புடையவள் என்று குறிப்பிடுகிறார். மேலும், பசுவினைக் காத்து வளர்பதோடு அது தரும் பயனையெல்லாம் மற்றவர்க்கும் வழங்கும் மாசில்லா பெண்ணரசி என்கிறார். மேலும், ஆயர்களின் வாழ்க்கை தீதில்லா வாழ்க்கை என்பதோடு அக்குலத்தைச் சேர்ந்த மாதரி என்ற முதுமகளும் அன்பும் அறமும் ஒருங்கே கொண்டு வலம் வருபவள் என்று அறியமுடிகின்றது.

**ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை**
**தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள் (அடை. கா. 120-123)**

மேலும், தன் மகள் ஐயை கண்ணகிக்கு துணைபுரியச் செய்தவள். கோவலன் கொலையுண்ட செய்தியை ஊராரின் அவலத்தின் வாயிலாக அறிந்த மாதரி, கண்ணகி முன் எதையும் சொல்வதறியாது எதுவும் செய்வதறியாது எங்கும் செல்வதறியாது மதி மயங்கி துயரத்தில் தவிக்கின்றாள். இதனை,

**அவள்தான்**
**சொல்லாடாள் சொல்லாடாள் நின்றாள் அந்நங்கைக்குச்**
**சொல்லாடும் சொல்லாடும் தான் (கொலை.கா.10-13)**

என்று மாதரியின் சொல்லிலடங்கா வேதனையையும் கண்ணகியின் பதற்றத்தையும் ஒருங்கே காட்சிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். தம்மிடம் அடைக்கலமாக வந்த பெண்ணிற்கு கொடும் பாவம் நேர்ந்துவிட்டதை உணரமுடியா சூழலில் மாதரியின் நிலையினை சித்திரித்துள்ளார் ஆசிரியர்.

**வருமுன் உரைத்த வளையாள்**

காப்பிய ஓட்டத்தில், பாண்டியன் மனைவி பாண்டிமாதேவியின் பங்களிப்பு பெண்மையைப் போற்றுவதாகும். தனது கணவனுக்கு ஏதோ ஆபத்து வரப்போகுது என்பதை முன்பே கனவின் வாயிலாக உணர்ந்து உரைத்தவள். அது ஒரு தீய கனவு என்று புறம் தள்ளிச் செல்லாமல், அரசனான கணவனிடம் சென்று கூறவும் செய்கிறாள். சரியாக அத்தருணத்தில் கண்ணகியும் அங்கு வந்து சேர்கிறாள். ஒரு பெண் தான் மட்டுமல்லாது தனது கணவன் அவனைச் சேர்ந்தோர் அவனது குலம் என்று அனைத்தையும் காக்க வேண்டிய பொறுப்பினைக் கொண்டவள்.

**செங்கோலும் வெண்குடையும்**
**செறிநிலத்து மறிந்து வீழ்தரும்**
**நம்கோன் தன் கொற்ற வாயில்**
**மணி நடுங்க நடுங்கும் உள்ளம்...**
**... வருவதோர் துன்பம் உண்டு**
**மன்னவர்க்கு யாம் உரைதாம் என (வழக்.கா. 10-15)**

என்று கணவனுக்கு வரக்கூடிய ஆபத்தை தடுக்க வேண்டும் என்று அத்தீயகனவை ஓடோடி வந்து முறையிடுகிறாள். தன் கணவனான பாண்டிய மன்னன் உயிர்நீத்த மறுவிநாடியே தன்னுயிரையும் நீத்த மறக்கற்பினைக் கொண்டவள் கோப்பெருந்தேவி.

**பெருங்குணத்தாள்**

இளங்கோவடிகள் காப்பியத்தில் கண்ணகியை அறிமுகப்படுத்தும்போதே "பெருங்குணத்தாள்" என்றுதான் அறிமுகம் செய்கிறார்.

**மாதரார் தொழுதேத்து வயங்கிய பெருங்குணத்துக்**
**காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி யென்பாள்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**போதிலார் திருவினாள் புகழுடை வடிவு என்னும்**
**தீதிலார் வடமீனின் திறம் இவள் திறம் என்றும் (மங்.வாழ். 26)**

திருமகள் போன்று வடிவினையுடையவள் என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

தேவந்தி கண்ணகியிடம் சோமகுண்டம், சூரியகுண்டம் சுற்றி வணங்கி வந்தால் கோவலன் கண்ணகியிடம் மீண்டும் வந்து சேருவான் என்கிறாள். அதனைக் கண்ணகி "பீடன்று" என மறுத்துவிடுகிறாள். இதற்கு காரணம் கோவலன் மேல் கண்ணகி கொண்ட அளவு கடந்த அன்பும் அதீத நம்பிக்கையுமே ஆகும். நளனின் மீது கொண்ட நம்பிக்கையே தமயந்தியை மீண்டும் சுயம்வரம் நடத்தச் செய்தது. பிசிராந்தையார் மீது கொண்ட நம்பிக்கையே கோப்பெருஞ்சோழனை வடக்கிருப்பதற்கு இடம் ஒதுக்கச்செய்ததுஎன்பது நாம் அறிந்த புராண இலக்கியச் செய்திகள் ஆகும். கண்ணகி கோவலன் மேல் கொண்ட அன்பானது,

**நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று!**
**நீரினும் ஆரளவின்றே சாரல் கருங்கோட் குறிஞ்சிப்புக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்.3)**

என்ற குறுந்தொகைப் பாடல் மட்டுமன்று,

**நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்**
**என்றும் என் தோள் பிரிவு அறியலரே (நற்.1)**

என்ற நற்றிணைப்பாடலையும் நினைவு கூரச் செய்கின்றது. கண்ணகியின் உள்ளத்தொலியினை உறுதிப்படுத்தும் விதத்தில் வாசல்பக்கம் வந்து நின்றான் கோவலன். வந்த கோவலன் வசைபாடுகிறான் மாதவியை. கேட்ட கண்ணகி கேள்வி ஏதும் எழுப்பவில்லை.

**சலம்புணர் கொள்கை சலதியோடு ஆடி**
**குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த**
**இலம்பாடு நாணம்தரும் எனக்கு (கனா.காதை. 66-71)**

என்கிறான் கோவலன். மாதவி மேல் குற்றம் சாட்டுகிறான் கோவலன். இச்சூழலில் கண்ணகியும் தன் துயரத்திற்கு காரணமான மாதவியை வசைபாடியிருக்கலாம். கண்ணகி அப்படி செய்யவில்லை. ஒரு குற்றம் நேர்வதற்கு குற்றவாளி மட்டும் காரணமல்ல. சூழலும் ஒரு காரணமாகும். அச்சூழலையே வென்று விடுகிறாள் கண்ணகி. ஒருவேளை கண்ணகி மௌனமாக இருந்தால் கோவலனின் கூற்றினை ஆமோதிப்பதுபோல் ஆகிவிடும். எனவே கணவனை வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கிறாள்.

**நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டி**
**சிலம்புள கொண்ம் (கனா.காதை70-73)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்றாள். முதன் முதலில் கணவனின் முதலீட்டிற்கு அச்சாணியிட்டவளே கண்ணகிதான் எனலாம். கண்ணகி கழுத்து நகை (மங்கள நாண்) இழந்த கதையை இங்ஙனம் பதிவு செய்கிறார் கவிக்கோ அப்துல்ரகுமான்.

**பால்நகையாள் வெண்முத்துப்**

**பல்நகையாள் கண்ணகிதன்**

**கால்நகையால் வாய்நகைபோய்**

**கழுத்துநகை இழந்த கதை (அப்துல்ரகுமான்)**

கோவலனின் பெற்றோர் கண்ணகியைக் காணவரும்போது கூட அவர்களிடம் தன் துயரினை வெளிக்காட்டவில்லை. பொய்யாக முறுவலித்த கண்ணகி மனதின் வலியை வரிந்துக்கட்டிக்கொண்டாள் என்றே கூற வேண்டும்.

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**

**மலையினும் மாணப் பெரிது (குறள்.126)**

வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வரைவிலக்கணமாகத் திகழ்ந்தவள் கண்ணகி.

மதுரை நோக்கி கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் செல்லும்போது சுடும் வெயிலில் நடந்து வரும் கணவனைப் பார்த்து பரிதாபப்படுகிறாள். தன்னோட துயரத்தினைக் காணாது, தமது கணவன் வெயிலின் கொடுமையர் துன்புறுகிறானே என்று துன்பப்பட்டாள் கண்ணகி. இதனைக் கண்ட கவுந்தி அடிகள்

**என்னோடு போந்த இளங்கொடி நங்கைதன்**

**வண்ணச் சீறடி மண்கள் அறந்திலள்**

**கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு**

**நடுங்குதய ரெய்தி நாப்புலர வாடித்**

**தன்துயர் காணாத் தகைசால் புங்கொடி (அடை.காதை.137)**

என்கிறார் கவுந்தியடிகள்.

**மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்**

**கடம்படாள் (வாழ்.காதை.3)**

என்று மாதவியின் மேல் வெறுப்பினைக் காட்டாத கண்ணகியை வியந்து போற்றுகிறாள் தேவந்தி.

**புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்**

**இகழ்ந்ததற் கிரங்கும் என்னையும் நோக்காய் (வரந்.காதை.98)**

என்று கண்ணகியின் தாயும் பாராட்டுகிறாள். பெண்களே வியந்து கண்ணகியின் குணநலன்களைப் பாராட்டுகிறார்கள். பற்றற்ற துறவியான கவுந்தியடிகள் கண்ணகியின் பண்புநலன்களை நாவாரப் பாராட்டுகிறாள்.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**சொல்லின் செல்வி**

கண்ணகி பேசாமடந்தை அன்று. பேசும் மடந்தை அதாவது பெரிதினும் பெரிதாய் பேசும் மடந்தை. அவள் திருவாயிலிருந்து உதிர்த்தவையெல்லாம் ஒன்றிரண்டு வார்த்தைகள்தான் ஆனால் அவை ஓராயிரம் பொருள் சொல்லின என்றே சொல்ல வேண்டும். தேவந்தி தம்மிடம் கேட்ட கேள்விக்கு கண்ணகி முதலில் ஒரே வார்த்தையில்தான் பதில் கூறுகின்றாள் "பீடன்று". அடுத்ததாக கணவனிடம் "சிலம்புள கொண்ம்" என்று இரண்டு வார்த்தையில் பதிலுரைக்கிறாள். அடுத்து கணவன் கேட்ட கேள்விக்கு "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று மூன்று வார்த்தைகளில் பதிலுரைக்கிறாள். "போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை" (கலித்.) கோவலனின் தவற்றை இவ்வளவு நாகரிகமாக நயம்பட கண்ணகியைத் தவிர யாரும் எடுத்துரைக்கமுடியாது. அதேசமயம் தனது நிலைப்பாட்டினையும் கண்ணகி வெளிப்படுத்துகிறாள். "மாற்றா உள்ள வாழ்க்கையேன்" என்பதுபோல், கணவன் மேல் தான் கொண்ட அன்பினையும் அவனது தவற்றினையும் அதேசமயம் தனது நிலைப்பாட்டினையும் மூன்றே வார்த்தைகளில் முத்தாய்ப்பாக கூறி முடிக்கிறாள் கண்ணகி. கோவலன் என்னால் நீ மிகவும் துயருற்றிருப்பாய் என்கிறான். அதற்கு கண்ணகி, "அறம் செய்ய முடியவில்லையே என்றுதான் அல்லலுற்றேன் என்கிறாள்.

**அறவோர்க் அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெகிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை (கொலை.காதை)**

எஎன்று நான்கு வார்த்தைகளில் பதிலளிக்கிறாள். என்கிறாள். அணிகல்கள், அலங்காரம், ஒப்பனை, விருந்து, சுகவாழ்வு இவையெல்லாம் பெரிதாகத் தோன்றவில்லை. எது பெரிது? "அறம் செய்தல்" அதை இழந்ததுதான் வேதனை அளிக்கிறது என்கிறாள்.

**அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி (குறள்.366)**

என்பதற்கு வாழ்விலக்கணமாகத் திகழ்ந்தவள் கண்ணகி. கோவலன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அதிகம் பேசாமல், ஓரிரு வார்த்தைகளில் நயம்பட உரைத்த நங்கை கண்ணகி.

**சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து (குறள்.200)**

என்பதற்குச் சிறந்த பதச்சான்று கண்ணகி.

கண்ணகியின் அறிவுசார் திறத்துக்கும் ஆற்றலுக்கும் வழக்குரைக்காதை ஒன்று போதும். யாரையோ நீ மடக்கொடியோய்! என்று பாண்டியன் கேட்டதும், அவனது தவறினை எடுத்த எடுப்பிலேயே சொல்லத் தொடங்கிவிட்டாள். அவன் சரியாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கவில்லை என்பதைக் குறிப்பிடும் விதமாக, "தேரா மன்னா" என்று சுட்டினாள். முதலில்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

தனது கதையைக் கூறியிருப்பாளேயானால், அவன் ஏதோ கதை கேட்பது போல் கேட்டுக்கொண்டிருப்பான். கண்ணகி அப்படி செய்யவில்லை. தொடக்கத்திலே அவனை சிந்திக்கத் தூண்டுகிறாள். ஒரு நெருக்கடியைக் கொடுக்கிறாள். கண்ணகியின் "தேரா மன்னா" என்ற வார்த்தை பாண்டியனை நிமிர்ந்து உட்கார வைக்கின்றது. (இதன் மூலம் வளைத்திருந்த செங்கோல் நிமிர்ந்து நிற்கப்போகின்றது என்பது ஒரு குறியீடு.) கண்ணகியின் சொல்லம்புகளை கூர்மையாக செவிமடுக்கிறான்.

**எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்**
**அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும்பெயர்ப் புகாரென் பதியே (வழக். காதை. 51)**

தனது சோழநாட்டின் நீதி மாண்பினை எடுத்துரைக்கிறாள். புறாவுக்கும், பசுவுக்குமே (அஃறிணை உயிர்கள்) நீதி வழங்கியவர்கள் எனது நாட்டின் மன்னர்கள். நியாயமான தீர்ப்பிற்காகப் புறாவின் துயரத்தைப் போக்குவதற்கு தனது தசையையும், பசுவின் துயர் துடைப்பதற்கு தனது ஒரே மகனையும் நீதிக்காக அர்ப்பணித்தவர்கள் எனது மன்னர்கள். நீயோ ஒரு நிரபராதிக்கு (உயர்திணை) தவறான தீர்ப்பினை அளித்துவிட்டாய்.

கண்ணகியிடம் "நீ யார்? எனக் கேட்ட பாண்டியனுக்கு, கண்ணகி தனது நாட்டு மன்னர்கள் நீதியை நிலைநாட்டிய தன்மை, வளையாத செங்கோல், கோவலனின் குடிப்பெருமை, மாமனாரின் செல்வநிலை, குலத்தின் மாண்பு , மதுரைவந்ததன் காரணம், கால் சிலம்பை விற்கும் சூழ்நிலை என்று அவனது ஒரு கேள்விக்கு அடுக்கடுக்காய் அர்த்தத்தோடு கூடிய ஆழமான கருத்துக்கள் பொதிந்த பதிலம்புகளை ஏவியதோடு இறுதியில்தான், உன்னால் குற்றம் சுமத்தப்பட்ட கோவலனின் மனைவி கண்ணகி என்று தன்னை அறிமுகம் செய்கிறாள்.

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள். 56)**

என்ற வள்ளுவப்பெருந்தகையின் வாக்கிற்கு வரைவிலக்கணமாகத் திகழ்ந்தவள் கண்ணகி.

தமிழகத்தின் முதல் பெண் வழக்குரைஞர் கண்ணகிதான். சொல்லப்போனால், வழக்கிற்கு சாட்சி வேண்டும். சாட்சிகளை ஆரதாரம் காட்ட வேண்டும் என்ற வழக்கத்தை ஏற்படுத்தியவளே கண்ணகிதான் எனலாம். ஒரு நாட்டின் மன்னனை எதிர்த்து சாதாரணமான ஒரு குடிமகள் வழக்குரைத்து நீதியை நிலைநாட்டுகிறாள்.

**நிறைவுரை**

தமிழில் எழுந்த முதல் காப்பியமாம் சிலப்பதிகாரம் பெண்மைக்கு பெருமை சேர்க்கின்றது. தமிழ் இலக்கிய உலகில் முதன் முதலில் பெண்ணைத் தலைமைப் பாத்திரத்தில்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

காட்டிய காப்பியம். தலைமைப் பாத்திரம் மட்டுமன்று துணைமைப்பாத்திரங்களும் காப்பிய ஓட்டத்திற்கு உறுதுணையாக அமைகின்றன. காப்பியத் தலைவி கண்ணகியை முதன் முதலில் "உலகிற்கு ஒரு மாமணியாகத்" திகழப்போகிறாள் என்றுரைத்ததே வேடுவ குலப்பெண்ணாவாள். கோவலன், கண்ணகி மதுரை வருவதற்கு உடன் துணைபுரிந்ததோடு கண்ணகியை மகளாக ஏற்று மாதரியிடம் அடைக்கலமாகத் தந்தவர் பெண் துறவியான கவுந்தியடிகள். இருவருக்கும் அடைக்கலம் தந்து வேண்டிய உதவிகளைச் செய்து தனது மகளையும் கண்ணகிக்கு துணையிருக்கச் செய்தவள் ஆயர்குலப்பெண்ணான மாதரி. கண்ணகியின் துயரத்தை முதலில் களைய முற்பட்டவள் அவளது தோழி தேவந்தியே ஆவாள். மேலும் கணவன் தன்னைத் துறந்துபோன துயரத்திலும் கண்ணகியின் துயரம் நீங்கி அவளது கணவனுடன் இன்புற்றிருக்க வேண்டும் என வாழ்த்தியவள். பாண்டியனுக்கும் மதுரைக்கும் ஏதோ தீங்கு நேரிடப்போகிறது என்பதை முதலில் உணர்த்தியவள் கோப்பெருந்தேவி. எல்லாவற்றிற்கும் மேலாக, பத்தினித் தெய்வத்திற்கு கோயில் எழுப்ப வேண்டும் எனக் குரல் கொடுத்தவள் வேண்மாள் தேவி!. இங்ஙனம், காப்பிய ஓட்டத்தை முன்னெடுத்து செல்வதிலும் காப்பியக் களத்தில் முன்னத்தி ஏர்களாகவும் காப்பிய பெண் மாந்தர்கள் விளங்குகிறார்கள். ஆகக் கூறின்,கண்ணகி என்ற கற்பின் பொற்கலசத்தை உயர்த்திப்பிடிக்கும் கோபுரங்களாக பெண் மாந்தர்கள் திகழ்ந்தார்கள் என்றால் அது மிகையல்ல.

**குறிப்புகள்**

[1] இராமசுப்பிரமணியன், வ.த. *புறநானூறு*, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17, 2008.
[2] இராமசுப்பிரமணியன், வ.த. *நற்றிணை.* திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17. 2009.
[3] சோமசுந்தரனார், பெ.வே. *குறுந்தொகை.* திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-17, 2007.
[4] பரிமேலழகர், (உ.ஆ.). *திருக்குறள்,* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், தி.நகர், சென்னை-17, 2016.
[5] மணிவாசகம், க., (உ.ஆ.). *தொல்காப்பியம்.* உமாபதிப்பகம், மன்னடி, சென்னை-01. 2006.
[6] மணிவாசகம், க., (உ.ஆ.). *சிலப்பதிகாரம்.* உமா பதிப்பகம், மன்னடி, சென்னை-01. 2022

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.